

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 285 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 12 – திங்கள்கிழமை 26 மே 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 285 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 12 - Monday 26 May 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00





**புதுடெல்லி, பாரத் மண்டபத்தில் நேற்று முன்தினம் (24.5.2025) பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட மாநில முதலமைச்சர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.**

## கல்வி நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு

# தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை தாமதமின்றித் தருக!

## ‘நிதி ஆயோக்’ கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, மே 26 -**

**“கல்வி நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை தாமதமின்றித் தருக” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுடெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற ‘நிதி ஆயோக்’ கூட்டத்தில் உரையாற்றும் போது வலியுறுத்தினார்.**

நேற்று முன்தினம் (24.5.2025) புதுதில்லி, பாரத் மண்டபத்தில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பிரதமர் - ஒன்றிய அமைச்சர்கள் - அனைத்து மாநில முதலமைச்சர்கள் - நிதி ஆயோக்கின் துணைத் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம்!

கடந்த சில நாட்களுக்கு முன்பு எல்லையில் நிலவிய பதற்றமான சூழ்நிலையில், நமது இராணுவ வீரர்களுக்கு ஆதரவாகப் பேரணி நடத்தி, நாட்டின் ஒற்றுமையை வெளிப்படுத்திய தமிழ்நாட்டின் சார்பாக இந்த நிதி ஆயோக்கின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி!

பிரதமர் மற்றும் ஒன்றிய அமைச்சர்கள் பங்கேற்றுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சமத்துவம் மற்றும் சமூகநீதி அடிப்படையில், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிதான் எங்களுடைய தொலைநோக்குப் பார்வை! “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற அந்தக் குறிக்கோளுக்குப் பெயர்தான் திராவிட மாடல்!



**புதுடெல்லி, பாரத் மண்டபத்தில், நேற்று முன்தினம் (24.5.2025) பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.**

### எங்களது இலக்கு ஒரு டிரில்லியன் பொருளாதார வளர்ச்சி!

எங்களது அரசில் - 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து, செயலாற்றி வருகிறோம்! அதன் பயன்கள்தான் புள்ளி விவரங்களாக - வளர்ச்சிக் குறியீடுகளாக எதிரொலிக்கின்றன!

குறிப்பாக, அண்மைக்காலங்களில் ஆண்டு தோறும் 8 விழுக்காட்டிற்கும் மேலான வளர்ச்சி! கடந்தாண்டு நாட்டிலேயே அதிகமாக 9.69 விழுக்காடு வளர்ச்சி என்ற பாய்ச்சலில், இந்திய விடுதலையின் நூற்றாண்டில் (2047இல்), 4.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற சவாலை எங்கள் முன் வைத்துக்கொண்டு உழைத்து வருகிறோம்! இந்தியாவின் இலக்கான 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தில், எங்களது பங்களிப்பு வலுவாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் தொழில்மயமாகியுள்ளது. ஆட்டோமொபைல் முதல் பசுமை ஹைட்ரஜன் வரை, அனைத்து வளர்ந்து வரும் துறைகளிலும் வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளோம்.

- இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 விழுக்காட்டு பெண் பணியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர்.
- 18 லட்சம் குழந்தைகளுக்குப் பயனளிக்கும் காலை உணவுத் திட்டம்,
- ஒரு கோடியே 14 லட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்’
- பெண்கள் இதுவரை 694 கோடி இலவசப் பயணங்களை மேற்கொண்டுள்ள விடியல் பயணம் திட்டம்,
- பணிபுரியும் மகளிர் தங்குவதற்கு தோழி விடுதிகள்,
- 40 லட்சம் இளைஞர்களுக்கும் மேலாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கியுள்ள ‘நான் முதல்வன்’,
- உயர்கல்வியை ஊக்குவிக்கும் ‘புதுமைப்பெண்’ - ‘தமிழ்ப்புதல்வன்’,
- கடந்த நான்காண்டுகளில் 30 புதிய தொழிற்பூங்காக்கள்,
- தகவல் புரட்சிக்கு அடித்தளமாக 16 புதிய சிறிய டைடல் பூங்காக்கள்.

### நகரமயமாக்களில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு!

இப்படி, எங்களுடைய திட்டங்களைப் பட்டியலிட்டு சொல்லிக்கொண்டே இருக்கலாம். இத்தகைய திட்டங்களால்தான், நகரமயமாக்கலில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது!


**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**


## அணு ஆயுதத்தைக் காட்டி

# இந்தியாவை பாகிஸ்தான் அச்சுறுத்த முடியாது!

## மாஸ்கோவில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி !

**மாஸ்கோ, ரஷ்யா, மே 26 -**

**“பாகிஸ்தான் அணு ஆயுதத்தை காட்டி, இந்தியாவை அச்சுறுத்த முடியாது! இந்தியா அமைதி பக்கம் நிற்பதாகவும், நேர்மைக்காக தொடர்ந்து போராடும்” என மாஸ்கோவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.**

பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையும், இந்தியாபாகிஸ்தான் இடையிலான மோதலும் குறித்து சர்வதேச நாடுகளுக்கு தெளிவாக விளக்குவதற்காக, அனைத்துக்கட்சி எம்.பிக்களை உள்ளடக்கிய 7 குழுக்கள் உருவாக்கப்பட்டன.

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் ஒரு எம்.பிக்கள் குழுவினர் ரஷ்யா சென்றனர். மாஸ்கோ நகரில் ரஷ்ய கூட்டமைப்பின் துணை வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரேரு டென்கோவை இந்திய எம்.பி.க்கள் குழுவினர் சந்தித்து பேசினர். மேலும், லிபரல்ஜனநாயகக் கட்சியின் கீழ் செயல்படும் சபை சர்வதேச விவகாரக் குழுவின் தலைவர் லியோனிட் ஸ்லட்ஸ்கி தலைமையிலான ரஷ்ய எம்.பி.க்கள் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுடன் வட்டமேசைக் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான எம்.பிக்கள் குழுவினர் விரிவாக ஆலோசனை மேற்கொண்டனர்.

அந்த சந்திப்பின்போது, பஹல்காம் தாக்குதல் குறித்தும், ஆபரேஷன் சிந்தூர் குறித்தும் இந்திய எம்.பி.க்கள் குழுவினர் விரிவாக விளக்கங்களை வழங்கினர்.



இதுகுறித்து, கனிமொழி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள டிவிட்டர் பதிவில், ‘அனைத்து வகையான பயங்கரவாதத்தையும், தோற்கடிப்பதற்கான இந்தியாவின் தெளிவான மற்றும் நிபந்தனையற்ற உறுதியையும், அதை ஒழிப்பதற்கான நமது சமரசமற்ற நிலைப்பாட்டையும் தேசிய உறுதியையும் வலியுறுத்தி, சர்வதேச விவகாரங்களுக்கான ரஷ்ய எம்.பி.க்கள் குழுவின் தலைவர் லியோனிட் ஸ்லட்ஸ்கி மற்றும் உறுப்பினர்களிடம். இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு விளக்கி கூறியது’ என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யா வெளியிட்டுள்ள அறிக்கையில், பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும், வெளிப்பாடுகளிலும் ஒழிப்பதற்காக ரஷ்யா இந்தியாவுடன் ஒற்றுமையாக நிற்கிறது என்று தெரிவித்துள்ளது.

மாஸ்கோவில் செய்தியாளர்களைச் சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி. “இந்தியா– பாக். மோதல் குறித்த பல தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன. அதோடு, பாகிஸ்தான் அணுசக்தி நாடு என்றும், அது அணு ஆயுதங்களை கொண்டிருக்கிறது என்று தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், நாங்கள் உண்மையை வெளிப்படுத்தவும், உண்மையில் நடந்ததை தெளிவுபடுத்தவும் விரும்பினோம்.

மேலும், அணு ஆயுதத்தை காட்டி இந்தியாவை அச்சுறுத்த முடியாது என்பதையும் நாங்கள் தெளிவாக கூற விரும்பினோம். இந்தியா எப்போதும் ஒருமைப்பாட்டிற்காகவும், நேர்மைக்காகவும், அமைதிக்காகவும் தொடர்ந்து போராடும். தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக நாம் ஒருங்கிணைந்து நிற்போம்” என்று கூறினார்.

முன்னதாக, கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இரவு ரஷியாவின் தலைநகர் மாஸ்கோவுக்கு சென்றபோது, உக்ரைன் ராணுவம் மாஸ்கோ விமான நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் டிரோன் தாக்குதல் நடத்தியது. இதன் காரணமாக, கனிமொழி குழு பயணித்த விமானம் உட்பட பல விமானங்கள் 45 நிமிடங்கள் வானில் வட்டமடித்தன.

இதைத் தொடர்ந்து, உக்ரைன் டிரோன்களை ரஷிய ராணுவம் நடுவானில் சுட்டு வீழ்த்தியது. பாதுகாப்பு அச்சுறுத்தல் நீங்கிய பிறகு மாஸ்கோ விமான நிலையத்தில் பயணிகள் விமானங்கள் தரையிறங்கின.

கனிமொழி கருணாநிதி குழுவினர் சென்ற விமானமும் பத்திரமாக தரையிறங்கியது. அவர்களை ரஷியாவுக்கான இந்திய தூதர் வினய் குமார் வரவேற்று அழைத்துச் சென்றார்.

## எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லை!

# கீழடி ஆய்வறிக்கை சரியாகவே உள்ளது!

### தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தகவல்!

சென்னை, மே 26 –

கீழடி ஆய்வறிக்கை சரியாகவே உள்ளதாகவும், அதில் எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லை எனவும் அகழாய்வுகளை தலைமையேற்று நடத்திய தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கீழடியின் முதல் 2 அகழாய்வு ஆய்வறிக்கையை இந்திய தொல்லியல் துறை இதுவரை வெளியிடாத நிலையில், திடீரென சில கேள்விகளை எழுப்பி கீழடி அகழாய்வு ஆய்வறிக்கையை திருத்தி எழுத உத்தரவிட்டிருந்தது. இந்திய தொல்லியல் துறையின் இந்த நடவடிக்கைக்கு தமிழ்நாட்டில் கடும் கண்டனங்கள் எழுந்தன.

இந்நிலையில், இந்திய தொல்லியல் துறைக்கு, ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் கடிதம் ஒன்றை எழுதி உள்ளார். அதில், கீழடி ஆய்வறிக்கை சரியாகவே உள்ளது என்றும் கீழடி கண்டுபிடிப்புகள், அறிவியல் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு, அதன் காலம் கி.மு 800 முதல் கி.பி. 500 என உறுதி செய்யப்பட்ட பிறகே அறிக்கை அளிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே திருத்தங்கள் தேவையில்லை என்றும் அடுக்குகள் வாரியாகவும், கால வரிசைப்படியும் அனைத்து ஆவணங்களும் அந்த அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், அகழாய்வு தொடர்பான வரைபடங்கள், தட்டுகள் அனைத்தும் உயர் தெளிவுத்திறனுடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர், இறுதி ஆய்வறிக்கையை தாக்கல் செய்து சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் கேள்வி எழுப்புவது சரியாக இருக்காது என்று தெரிவித்துள்ளார்.

கீழடி அகழாய்வு களத்தின் தொல்லியல் கண்காணிப்பாளராக அமர்நாத் ராமகிருஷ்ணா பணியாற்றினார். அவரது தலைமையிலான குழுவினர், அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பொருட்கள் மூலம் கீழடி நகர நாகரிகம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.